1971 ஜூன் 22]

சிபார்சைக் கூட நாம் செய்திருக்கிறோம். ஆகவே அம்மாதிரியான நிலையில் மத்திய அரசு தமிழக அரசின் முதல் அமைச்சர் அவர்களைக் கலந்து கொள்ள வேண்டும் என்ற ஆலோசனையைக் கொடுத்தார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் எடுத்துச் சொல்கிற அதே கருத்தின் அடிப்படையில்தான் நான் மேலவையில் பேசுகிற நேரத்தில் கருத்து தெரிவித்தேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: பல கோடித் தமிழர்களின் பிரச்சனை வெளிநாட்டுக் கொள்கையோடு பிணைந்திருப்பதால் இனிமேலாவது நாஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டம் போன்ற மற்றக் கூட்டங்களில் கலந்து கொள்ள மாநில முதல் அமைச்சர் அவர்கள் டெல்லிக்குப் போகும்போது கட்டாயமாக தமிழக முதல் அமைச்சர் அவர்களைக் கலந்து பேசவேண்டுமென்று வற்புறுத்துவார்களா? அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: வற்புறுத்துவேன். நான் வற்புறுத்துகிற நேரத்தில் இவரை ஏன் கலந்து கொள்ள வேண்டுமென்று உங்கள் தரப்பிலிருந்து சொல்லாமல் இருந்தால் அதுவே எனக்குத் தக்கப் பாதுகாப்பாக இருக்கும்.

Statue of Gandhiji at Salem

* 17 *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Hon. Chief Minister has received a petition from 15th ward Gandhiji Centenary Celebration Committee, Salem for permission to erect the statue of Gandhiji; and

(*b*) if so, the details thereof and the action taken thereon?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) சேலம், 15-ஆவது தொகுதியைச் சேர்ந்த காந்தியடிகள் நூற்றாண்டு விழாக்குழு, காந்தியடிகள் சிலையொன்றை நிறுவ அரசு ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அது தற்போது எந்த நிலைமையில் இருக்கிறது என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதற்கான அனுமதி, 15—3—1971 லேயே முதல் அமைச்சர் அவர்கள் ஆணையிட்டு வழங்கப்பட்டு விட்டது. ஆனால் அந்த விழாக் குழுவினர் நாகபுரியிலிருந்து 3¼ அடி உயரமுள்ள காந்தி அடிகளின் சிலை ஒன்றை வாங்கியிருப்பதாகத் தெரிகிறது. விழாக் குழுவினர் செய்கிற தாமதத்தின் காரணமாகத்தான் அந்தச் சிலை திறப்பு விழா இன்னும் நடைபெறவில்லை என்ற தகவல் வந்திருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சிலைகளை எந்தெந்த இடங்களில் அமைக்கவேண்டுமென்று ஏதாவது சட்டதிட்டங்கள் போட்டிருக்கிறீர்களா? அதற்கான ஏதாவது விதிகள் உண்டா? அப்படிச் சிலைகள் வைப்பது போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருந்தால் அந்த இடங்களில் வைக்கக்கூடாது என்பதற்கான விதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஏற்கனவே அதற்கு விதிகள் இருக்கின்றன, அந்த விதிகள் எல்லாம் ஆராய்ந்துதான் சிலைகள் வைக்கப்படுகின்றன.

Rural Employment Programme

* 18. *Q.*—THIRU N. K. PALANISWAMY:
THIRU K. T. K. THANGAMANI:
THIRU M. P. SARATHY: } Wil the Hon.

the Minister for Education and Local Administration be pleased **to state—**

(*a*) whether district-wise plans have been formulated to mplement a crash programme for rural employment in this State;

(*b*) if so, details of the same; and

(*c*) the amount of grant promised by the Centre for the same?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) திட்டமாக நிறைவேற்றப்படும் திட்டங்களின் விவரங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து கேட்கப்பட்டுள்ளன.

(உ) மாவட்டம் ஒன்றுக்கு ரூ 12.50 லட்சம் (தொழிலாளர் தொடர்பாக ரூ. 10.00 லட்சம், சாதனங்கள் தொடர்பாக ரூ. 2.50 லட்சம்). இம்மாநிலத்திற்காக மொத்தம் ரூ. 162.50 லட்சம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: மத்திய அரசு கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக க்ராஷ் ப்ரோக்ராம் என்று சொல்லி ரூ. 50 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். அதன் ஒரு பகுதியாகத்தான் இப்படி மாவட்ட ரீதியாகக் கொடுக்கிறார்கள். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ரூ. 1,25,000 என்றுதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேற்கொண்டும் கொடுக்கப்படும் என்று ஏற்கனவே அறிவித்திருக்கிறார்கள். நான் அறிய விரும்புவது இந்த ப்ரோக்ராம் அடிப்படையில் ஏற்கனவே செய்த வேலைகள் மாதிரி மண் போடுவது, அல்லது குளங்களை ஆழப்படுத்துவது என்ற வேலைகள்தான் வருகின்றன. ஆனால் மக்களுக்கு உதவிகரமாக இருக்கக்கூடிய பணிகளில் ஈடுபடும்படி ஆட்கள் சேர்க்கப்படுவார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மத்திய அரசு இந்தத் திட்டத்தின் கீழ் ரூ 162.50 லட்சம் தருகிறது. அந்த வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் பத்து வட்டாரங்கள், பத்து